dispensaries இருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் கேட்டிருக்கிறார்கள். நானும் அந்த விவரங்களைக் கையிலே வைத்திருக்கிறேன். நீண்ட நேரம் செல்லக் கூடாது என்பதற்காகத்தான், அதையெல்லாம் சுருக்கி இந்தத் தகவலை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: அந்தப் பகுதியிலே அதிகமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை நானும் அறிவேன். ஆனால், 50,000 காப்பீட்டாளர்கள் இருந்தால்தான் மருத்துவமனையை உருவாக்க முடியுமென்று ESI–புது டெல்லியினுடைய உத்தரவு இருக்கின்ற காரணத்தால், உரிய ஆய்வு செய்து, உரிய அதிகாரிகளுடன் மேற்பார்வையை மேற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உங்களுடைய ஆர்வத்தின் அடிப்படையிலே அங்கே மருத்துவமனையை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு, மனதிலே கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, விரைவிலே அந்த மருத்துவமனை உருவாவதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

141—

சுற்றுலாத் தலம்

***3573—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதி, தேவனாம்பட்டினம் சில்வர் பீச்சை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடலூரிலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் தேவனாம்பட்டினம் Silver Beach *கடற்கரை அமைந்துள்ளது. இந்த* Silver Beach *கடலூர் மாவட்டத்திற்கு ஒரு* Marina Beach *போன்று, ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக அமைந்துள்ளது. எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் துறை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அதுபோன்று ஓர் அரசாணை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், நெல்லிக்குப்பம், நெய்வேலி, பண்ருட்டி மற்றும் புதுவை என அனைத்துப் பகுதியினரும் செல்லக்கூடிய கடலூர், தேவனாம்பட்டினம் வெள்ளிக் கடற்கரையானது, சென்னை Marina Beach*-க்கு அடுத்து, அதிக மணற்பரப்பைக் கொண்ட அழகிய பகுதியாகும். அங்கே சிறுவர் பூங்கா, நிழற்குடைகள், நடைப் பயிற்சி மேற்கொள்ளக்கூடிய நடைபாதைகள், உணவகத்துடன்கூடிய தங்கும் விடுதிகள், உயர் மின் கோபுர விளக்குகள் போன்ற பல்வேறு வசதிகளை செய்து தந்து, சுற்றுலாத் தலமாக மாற்றிட வேண்டும். கடலூர் மாவட்டத்தில், பிச்சாவரத்திற்கு அடுத்து, எந்தவிதமான ஒரு சுற்றுலாப் பகுதியும் இல்லாத காரணத்தால் அழகிய மணற்பரப்பைக் கொண்ட அந்த இடத்தை ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றி அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 ஏப்ரல் 20

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் நகராட்சி தற்போது மாநகராட்சியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. Silver Beach பகுதி மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியாகும். சென்னை மக்களுக்கு Marina Beach போன்று, கடலூர் மற்றும் சுற்றுப்புற மக்களுக்கு Silver Beach அமைந்திருக்கிறது. உள்ளூர் மக்களைத் தவிர்த்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் அதிகம் வரும் இடமாகும். இப்பகுதிகளில் சிறுவர் பூங்கா, நிழற்குடைகள், சிமென்ட்டில் அமரும் இருக்கைகள், குளியலறை மற்றும் கழிப்பறை போன்ற வசதிகளை ஏற்படுத்துவதற்கு கடலூர் மாநகராட்சியிடமிருந்து கருத்துரு கோரப்பட்டுள்ளது. கருத்துரு பெறப்பட்டவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, சுற்றுலாத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஆய்வுசெய்து, துறையின் நிதிநிலைமைக்கேற்ப, கடலூர் மாநகராட்சியுடன் இணைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியுள்ள சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துகூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொகை ஏதும் ஒதுக்குமாறு சொன்னால், அதையும் நான் ஒதுக்கித் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகையால், இந்த வருடமே அந்தப் பணியை மேற்கொண்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து, தினசரி 20,000, 25,000 மக்கள் வந்து செல்கின்ற கடலூர் Silver Beach–ஐ ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றியமைக்க உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றி. அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுப்பாரென்றால், கண்டிப்பாக தமிழ்நாடு சுற்றுலாத் துறையும், அங்கிருக்கின்ற மாநகராட்சியும் இணைந்து செயல்பட்டு, விரைவான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள், சொல்கிறேன்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 19–4–2022 அன்று மயிலாடுதுறை மாவட்டம், தருமபுரம் ஆதீனம் அவர்களைச் சந்திக்கச் சென்றபோது நடைபெற்ற நிகழ்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட சில மாமன்ற உறுப்பினர்கள், நேற்று ஆளுநர் அவர்கள் பயணத்தின்போது ஏற்பட்ட நிகழ்வு குறித்து விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய விவாதத்திற்கு வலுசேர்க்கும்வண்ணம், நம்முடைய ஆளுநர் அவர்களின் பெயரையோ, அவருடைய பதவிகளையோ குறிப்பிட்டுப் பேசக் கூடாது என்ற நிபந்தனையுடன்—உங்களுடைய உரைக்கு வலுசேர்க்கும் வண்ணமாக ஆளுநர் அவர்களுடைய பெயரை பயன்படுத்தக் கூடாது.உங்களுக்கு ஏற்கெனவே தெரியும்.ஏற்கெனவே பல சட்டங்களெல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நான் விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. அந்த நிபந்தனையுடன்—மாமன்ற உறுப்பினர்கள், எந்தெந்த நேரத்தில் அறிவிப்பு கொடுத்தீர்கள் என்ற அடிப்படையில், முதலாவதாக மாண்புமிகு உறுப்பினர் திருவாளர் கு. செல்வபெருந்தகை அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)